கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக

குறள் விருந்து



குறள்நெறி பரப்பத் திங்கள் தோறும் வெளி வரும் உலகின் ஒரே சிறுவர் மின்னிதழ்

தி.வ.ஆ.-2057 தை- 1 பொ.ஆ.-2026 சனவரி-15

உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகத்தால் வெளியிடப்படும் இலவசச் சிறுவர் மின்னிதழ்

சிறப்பாசிரியர்:முதுமுனைவர் முரசு நெடுமாறன்

பொறுப்பாசிரியர்: திருமதி.தாமரை சீனிவாசராவ்

ஆசிரியர்: மறைமலை இலக்குவனார்

உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துகள்

பொங்கல் திருநாள்

பொங்கல் திருநாள் வந்தால்
புதிய தெம்பு பிறக்கும்

பழையன எல்லாம் கழியும்
புதியன வீட்டில் பூக்கும்

எல்லார் முகத்திலும் மகிழ்ச்சி
எல்லார் வீட்டிலும் விருந்து

அம்மா பொங்கும் பொங்கல்
ஆகா எத்துணை இனிமை

உடன்பி றந்தார் போல
ஒன்று கூடும் விழாவாம்

பொங்கல் திருநாள் வந்தால்
புதிய தெம்பு பிறக்கும்!

முரசு ஐயா அவர்களின் ‘சிறுவர் பாட்டமுதம்’ நூலிலிருந்து

மலேசியாவின் முதுபெரும் இலக்கியப் படைப்பாளி. தமிழ்நாட்டு அரசால் முதன்முதலில் விருது வழங்கிச் சிறப்புச் செய்யப்பட்ட அயலகத் தமிழர். [14சனவரி 1936]

முரசு தாத்தா வாழியவே!

மலேசிய நாட்டு முரசு தாத்தா
மாண்பார் ஆசான் நம் தாத்தா
நல்லாசிரியராய்ப் புகழ் சேர்த்தார்
எல்லாக் குழந்தைகளும் பயனுறவே
நாடகம் மலேசிய வானொலியில்
ஆயிரக்கணக்கில் இவர் படைத்தார்
பாப்பாக்கள் தமிழில் பாடிடவே
பாகார் தமிழில் படைத்துள்ளார்
மலேசிய அரசு மட்டுமின்றி
தமிழ்நாட்டரசும் விருதளித்துப்
போற்றி மகிழ்ந்தது கண்டோமே
தொண்ணூறை நெருங்கும் நம் தாத்தா
தொண்டுகள் ஆயிரம் புரிந்துள்ளார்
முத்தமிழிலும் நமக்கு விருந்தளிக்கும்
முரசு தாத்தா வாழியவே!

விற்பனைக்கு அல்ல

பொங்கலோ பொங்கல்

தாமரை சீனிவாசராவ்



திருமதி.தாமரைசீனிவாசராவ் நம் இதழின் பொறுப்பாசிரியர்; முற்போக்கு எழுத்தாளர்; பல மகளிர் அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளர்; கம்போடியா நாட்டு ஆங்கோர் தமிழ்ச்சங்கப் பொருளாளர்; பல மாநாடுகளைத் திறம்பட நடத்திய, நடத்திவரும், பெருமைக்குரியவர்.

இடம்: அரசு நடுநிலைப்பள்ளி.

[பள்ளி வளாகம்.அனைத்து வகுப்பின் மாணவர்களும் பொங்கல் சிறப்பு நிகழ்வுகளைக் கண்டுக் களிக்க வரிசையாக அமர்ந்திருந்தனர்.கலை நிகழ்ச்சிகள் நடந்திருக்கும் வேளையில்....]

பள்ளியில் மாணவர்கள் பொங்கல் விழாவை கொண்டாடுவதை முன்னிட்டு,நிகழ்வின் ஒரு பகுதியாக ஏழாம் வகுப்பு மாணாக்கர்கள்,ஆசிரியர் இடையே பொங்கல் திருநாளைப் பற்றிய உரையாடல் நிகழ்ச்சியாக, நடத்துகிறார்கள்.

ஆசிரியர்: காலை வணக்கம் செல்வங்களே.

மாணவர்கள்: காலை வணக்கம் தமிழம்மா!

ஆசிரியர்: என்ன அனைவரும் பொங்கல் திருநாளைக் கொண்டாட ஆயத்தமாகி விட்டீர்களா?

மாணவர்கள்: ஓ...மகிழ்ச்சியாகக் காத்திருக்கிறோம் தமிழம்மா! (ஒரே குரலில் உரக்கக் கூறுகிறார்கள்.)

ஆசிரியர்: அடடே! இவ்வளவு உற்சாகமாக இருக்கிறீர்களே.அனைவருக்கும் எனது உழவுத் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்கள்: நன்றி தமிழம்மா! உங்களுக்கும் வாழ்த்துகள்.

ஆசிரியர்: சரி இன்று நாம் உழவுத் தொழிலின் மேன்மையைப் போற்றும் இந்த பொங்கல் திருநாளைப் பற்றி பேசுவோமா?

மாணவர்கள்: சரிங்க தமிழம்மா!

ஆசிரியர்: சரி நான் கேட்கும் கேள்விகளுக்கு நான் அழைப்பவர்கள் பதில் தாருங்கள்.சரியா?

மாணவர்கள்: சொல்கிறோம் தமிழம்மா!

ஆசிரியர்: சரி முதலில் உழவுத் திருநாள் விழா எப்படி தோன்றியது என நான் சொல்கிறேன்., பொங்கல் விழாவானது தமிழர்களின் தொன்மையையும்,சிறப்பையும் விளக்கும் இயற்கை வழிபாட்டின் அழகிய அடையாளமாகும்

” சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை”

என்ற உயர்ந்த வாழ்வியல் பொருளைக் கொண்டது நமது பண்பாடு என்பதை நமது வள்ளுவரும் கூறியிருக்கிறார்.எத்தொழில் செய்தாலும்,செல்வந்தர்களானாலும் மனிதர்கள் பிற வேலைகள் செய்பவராக இருந்தாலும் தொழில்களுக்கெல்லாம் முதன்மையானது,சிறப்புடையது உழவுத் தொழிலே என இக்குறளில் கூறியுள்ளார்

அறுவடைத் திருநாளாக மிகச் சிறந்த அளவில் கொண்டாடப்படும் திருநாளாக, பொங்கல் திருநாளை நாம் கொண்டுள்ளோம்.தை மாதப் பிறப்பே நமக்கு உயர்வு தரும் மாதமாகத் தொடங்குகிறது.அதாவது உழவர்கள் பொருளீட்டக்கூடிய நேரம் அது. அதனால் தைப்பிறப்பே தமிழருக்கு வருடப்பிறப்பு என புரட்சிக் கவி தீர்க்கமாக தனது கவிதை வரிகளில் ‘தரணி ஆண்ட தமிழருக்குத் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு’ என ஆழமாகப் பதிந்துள்ளார்.

தமிழர்கள் மூத்த குடிகளாக பல தரப்பட்ட நாட்டினருக்கு அனைத்து வகைகளிலும் வழிகாட்டியாக இருந்துள்ளார்கள் என்பதை நாம் உறுதியாகச் சொல்லலாம்.ஏனெனில் நாம் தொன்று தொட்டு இயற்கையை வணங்கி,அதன் பயனை உணர்ந்து,நன்றி பாராட்டிவரும்,அறிவார்ந்த சமுதாயமாக வாழ்ந்து வருகிறோம்.அவ்வாறே தமது

பழக்கவழக்கங்களில் முதன்மையாக இயற்கையை வழிபடும் சிறந்த வழிமுறையைத் தமிழர்கள் கடைப்பிடித்தார்கள்.

தமக்கு உதவிய கால்நடைகளுக்கும்,பயிர்களுக்கும்,பயிர்கள் வளர உதவும் ஆதவனையும், உழவுக்கு உதவும் ஏர்க்கலப்பைகள் மற்றும் பிற உபகரணங்கள் ஆதவன் முன் வைத்து கதிரொளி தோன்ற, பொங்கலிட்டுப் படையலிடுவார்கள்.நீரின் மேன்மையை உணர்ந்த தமிழர்கள் ஆறு,குளம், கண்மாய்களும்,கேணிகளும், அமைத்து நீர்நிலையைப் பாதுகாத்து வந்தார்கள்.இப்படி உலகத்திற்கே உழவின் சிறப்பைப் பற்றி, நம் “கங்கை கொண்ட சோழபுரத்து” சோழ மன்னனான இராசேந்திர சோழன் கடல் கடந்து விதை நெல்,நீர்நிலைத் தேக்கம் மற்றும் பாதுகாப்பு பற்றி தென்கிழக்காசிய நாடுகளில் பரவச் செய்தான் என்ற பெருமையும் தமிழர்களான நமக்கு உண்டு.கடந்த ஆண்டு கூட அவன் தென்கிழக்காசிய நாடுகளை வென்றெடுத்த ஆயிரமாவது சிறப்பான நினைவு விழாக்கள் நடத்தப்பெற்றன.அப்படிப்பட்ட காலக்கட்டத்தில் வாழ்ந்து வருகிறோம் என்பது நமக்கெல்லாம் பெருமை தானே.

மாணவர்கள்: ஆமாம் தமிழம்மா.

ஆசிரியர்:சரி பொங்கல் விழா எத்தனை நாள் கொண்டாடப்படுகிறது?குவிரன் நீ சொல்.

குவிரன்:பொங்கல் விழா நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது தமிழம்மா.அவை போகிப் பொங்கல்,தைப்பொங்கல்,மாட்டுப் பொங்கல்,காணும் பொங்கல் என கொண்டாடப்படுகிறது.

ஆசிரியர்:சிறப்பு குவிரன்,அழகாகச் சொன்னாய்.

அமுதா நீ போகிப் பண்டிகையைப் பற்றிச் சொல்!

அமுதா:நாம் வீட்டை சுத்தம் செய்வது,பழைய பொருட்களைத் துப்புரவு செய்வது முதலிய வேலைகளைச் செய்வோம்.பழைய பாய்கள்,கூடைகள் முதலியவற்றை அதிகாலையில் எழுந்து எரித்து சுத்தம் செய்து அந்த நாளைத் தொடங்குவோம் தமிழம்மா!

ஆசிரியர்: பரவாயில்லயே! அனைத்துச் செய்முறைகளையும் நன்றாகச் சொன்னாய்.

ஆசிரியர்:ஆதன், நீ தைத் திருநாளைப் பற்றி கூறு.அனைவரும் தெரிந்துக் கொள்ளட்டும்.கடந்த வாரம் நீ பேச்சுப் போட்டிக்குச் சென்று பரிசு வாங்கி வந்தாய் அல்லவா! அனைவரும் ஆதனுக்கு கைதட்டல் செய்யுங்கள்.

மாணவர்கள்: அனைவரும் கைதட்டி மகிழ்ச்சிக் குரலில் வாழ்த்தினார்கள்.

ஆதன்: தமிழர்களின் உயிர் நாடி தான் உழவுத் தொழில்.இந்த உலகில் எவ்வளவு சிறப்பான செயல்களையும் செய்யலாம்,உயரலாம்.ஆனால் உழவில்லாமல் உணவு கிடைக்காது.அதனால் அந்தச் சிறப்பான உழவின் மேன்மையைப் போற்றவே உழவுத் திருநாளை நாம் கொண்டாடுகிறோம்.

தை மாதம் முதல் அனைவரும் அதிகாலையிலேயே எழுந்து,நீராடி,புத்தாடை அணிந்து, அறுவடை செய்த புத்தரிசியை முதலில் புதுப் பானையில் இட்டுப் பொங்கலிடுவர். பானையில் பொங்கி வரும் போது வீட்டில் அனைவரும்'பொங்கலோ பொங்கல்' என மகிழ்ச்சி முழக்கத்தோடு சொல்லி, மகிழ்ந்து கதிரவனை வணங்குவார்கள்.பிறகு படையலிட்ட உணவை அனைவரும் பகிர்ந்து உண்பார்கள்.இது தான் தைமாதப் பிறப்பின் சிறப்பு.

ஆசிரியர்: வளமாகச் சொன்னாய்.வாழ்த்துகள்.மீனாட்சி நீ மாட்டுப் பொங்கலின் சிறப்பைப் பற்றி சொல்லேன்.

மீனாட்சி: சொல்கிறேன் தமிழம்மா!

மாட்டுப் பொங்கல் என்பது நமது உழவுத் தொழிலுக்கு உதவும் கால்நடைகளுக்கு நன்றி செலுத்தும் நாளாகும்.நாம் நமக்கு உதவி செய்யும் கால்நடைகளை இறைவடிவிலேயே பார்க்கிறோம்.நம்முடன் அவைகளும் சேர்ந்து உழைப்பதால் அவற்றையும் நாம் பாராட்டிக் கொண்டாடி நன்றி செலுத்தும் பண்பை நம் முன்னோர்கள் நமக்கு கற்றுத் தந்தார்கள்.அன்று மாடுகளைக் குளிப்பாட்டி அதன் கொம்புகளைச் சீவி,வண்ணமடித்து விடுவார்கள்.வண்ண நிற மூக்கணாங்கயிறு, தலைக்கயிறு,தாம்புக் கயிறு கட்டுவார்கள்.கழுத்து சலங்கைகள்,பித்தளை வளையல்கள்,போட்டு அலங்காரம் செய்வார்கள்.வண்ண வண்ண ஊதற்பைகளைக் கட்டி அழகு செய்வார்கள்.மஞ்சளிட்டு குங்குமப் பொட்டு வைத்து அழகாக அலங்காரம் செய்வார்கள்.பிறகு அன்று பொங்கலிட்டு வீட்டில் இருக்கும் பெரியவர்கள் வாழையிலையில் பொங்கல் வைத்து கால்நடைகளுக்கு ஊட்டியும் விடுவார்கள்.

ஆசிரியர்: [கைதட்டி பாராட்டி]

மிக அழகாகச் சொன்னாய் மீனாட்சி .

சரி இப்போது மாட்டுப் பொங்கலின் மற்றொரு சிறப்பைப் பற்றிச் சொல் அதியமான்.

அதியமான்: மாட்டுப் பொங்கலின் மற்றொரு சிறப்பு சல்லிக்கட்டு கொண்டாட்டம்.நமது வீரத்தையும்,போர்க்குணத்தையும் பறைச்சாற்றும் வீர விளையாட்டுகளில் முக்கியமானது சல்லிக்கட்டு.ஆண்டாண்டு காலமாக நாம் வேரூன்றிய வழமையான விழாவாகும். வலிமைவாய்ந்த காளைகளையும்,பசுக்களையும் வளர்த்து வருகிறோம். காரிமாடு,காங்கேயம் மாடு,செவலை மாடு,கொம்பன் மாடு,மூக்கன் மாடு என அவை பலவகைப்படும்.அவை உழவிற்கு மட்டும் பயன்படாமல் வீர விளையாட்டிலும் பங்கெடுப்பதே அதன் சிறப்பு.மேலும் அப்படிப்பட்ட வீரமிக்க காளைகளை நமது வீட்டுப் பாட்டி,அம்மா,அக்கா,அத்தை,சித்தி போன்றோர் அரவணைத்துப் பயிற்சியளித்து வளர்ப்பது நமது வீரமிக்க குடியின் மரபு நெறியை அறிந்து கொள்ள உதவுகிறது. இவ்வாறு நமது பழந்தமிழரின் மரபு பெரும் வரலாறுகளைக் கொண்டுள்ளது.சங்க காலத்திலிருந்தே ஏறு தழுவுதல் என்ற பெயரில் இந்த வழக்கம் உள்ளது.கலித்தொகை,முல்லைக்கலிப்பாடல்கள்,புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்களில் இதைப்பற்றிய ஆதாரமும் உள்ளது.

ஆசிரியர்: வீரமிக்க சல்லிக்கட்டைப் பற்றி விளக்கிய அதியமானிற்கு கைத்தட்டல்கள் கொடுங்கள்.

(அனைவரும் கைதட்டுகிறார்கள்)

ஆசிரியர்:கண்மணி நீ இப்போது காணும் பொங்கலின் சிறப்பைப் பற்றி விளக்கமாகச் சொல்லேன்.

கண்மணி: காணும் பொங்கல் நமது பொங்கல் திருநாட்களின் நிறைவு நாளில் கொண்டாடும் நிகழ்வாகும்.காணும் பொங்கலென்றால் நாம் பிற இடங்களுக்குச் சென்று இளைப்பாறுவது,மகிழ்ந்திருப்பது என்று கூடச் சொல்லலாம்.அப்போது எல்லாம் அனைவரும் கேளிக்கை,விருந்து,சுற்றுலா என அடிக்கடி வெளியே செல்வது,கொண்டாடுவது என இருந்தது இல்லை.அப்படிக் கொண்டாடவும் முடியாது.உழைப்பிற்கு மட்டும் முதன்மை கொடுத்து வந்தவர்கள் நம் முன்னோர்கள்.அதனால் பொங்கல் திருநாளில் காணும் பொங்கல் என்ற நாளைச் சேர்த்து மகிழ்ந்திருப்பதற்கென்றும், உறவுகளோடு கூடிக் களித்திருக்கவும், பெரியோரைப் போற்றவும்,நமது தொன்மையான பழக்க,வழக்கங்களைப் பாதுகாக்கவும் செய்தனர்.உறவுகள்,நட்பு என கூடிக் குலாவ காணும் பொங்கல் என்னும் நாளை தேர்வு செய்தார்கள்.மேலும் எளிமையாக தங்களால் இயன்றப் பரிசுகளை,வேளாண் பொருட்களைப் பரிமாறிக் கொள்வது என அந்நாட்கள் சிறப்பாக கழியும்.நமது பண்பாடு மற்றும் அடையாளச் சின்னங்களாகத் திகழும் கோயில் தளங்கள்,பண்பாட்டுச் சின்னங்கள் ஆகியவற்றைக் காண கூட்டமாகச் செல்வார்கள். பின்பு கூட்டமாக அமர்ந்து எடுத்துச் சென்ற உணவு வகைகளை உண்டுவிட்டு வருவார்கள்.இப்படி மகிழ்ச்சியாக பல இடங்களுக்குச் சென்றும், உறவுகளோடும், நண்பர்களோடும் களித்திருந்து,மகிழ்ந்திருப்பர்.

ஆசிரியர்:நன்று,கேட்பதற்கே எவ்வளவு மகிழ்ச்சியாக உள்ளது!

இப்படித்தான் பொங்கல் விழா என்பது நமது பாரம்பரியத்தைப் போற்றும் விழாவாகவும்,பண்பாட்டைச் சுமந்து வரும் விழாவாகவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவின் பிற பகுதிகளிலும் அறுவடைத் திருநாள் கொண்டாடப்பட்டு வருவது வேளாண்மைத் தொழிலுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.ஆகவே நாம் அனைவரும் நம் பண்பாட்டைப் போற்றி நமது முன்னோர் காட்டிய வழியில் பழக்கவழக்கங்களைத் தொடர்வோம். வேளாண்மையை முன்னிறுத்தி தாய் மண்ணை முன்னேற்ற உறுதி கொள்வோம். என்ன மாணவர்களே உங்கள் அனைவருக்கும் இந்த உரையாடல் பயனுள்ளதாக இருந்திருக்கும் அல்லவா!

(அனைவரும் கைதட்டி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்த நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது)..

திருக்குறளைப் பின்பற்றுவோம்.திருவள்ளுவரைப் போற்றுவோம்.

மதம் சாராத திருவள்ளுவரை, தமிழின் மிகச்சிறந்த வரலாற்று ஆளுமையாக முன்வைப்பதில் தமிழறிஞர்கள் ஒருமித்த முடிவெடுத்தனர். இதன் பயனாக அவரை முன்னிறுத்தி "திருவள்ளுவர் திருநாள்" என்னும் பண்டிகையை தமிழர் யாவரும் கொண்டாடவேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது. 1935 சனவரி 17ஆம் தேதி, இதற்கான கால்கோள் இட்டவர்கள், காழி சிவகண்ணுசாமிப்பிள்ளையும், பத்மஸ்ரீ திரு.வ.சுப்பையாவும்.அவர்களின் முயற்சியில் "திருவள்ளுவர் திருநாட் கழகம்" எனும் கழகமொன்று அமைக்கப்பட்டு, தமிழகம், அயல் மாநிலங்கள், அயல் நாடுகளில் அதைக் கொண்டாடுவதென்றும் முடிவெடுக்கப்பட்டது. திருவள்ளுவர் பிறந்த தினமான வைகாசி அனுடத்தை மையமாக வைத்து, 1935 மே 17,18 ஆகிய தேதிகளில், சென்னை பச்சையப்பன் கல்லூரியில், மறைமலையடிகள், தெ.பொ.மீ, திரு.வி.க முதலான ஏராளமான தமிழறிஞர் முன்னிலையில் திருவள்ளுவர் திருநாள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

திருவள்ளுவர் திருநாள் மெல்ல மெல்ல வழக்கொழிந்து போகத் துவங்கிய நிலையில், ஈழத்தமிழ் அறிஞர் கா. பொ. இரத்தினம் 1954இல் எடுத்த முயற்சிகளின் பயனாக, தமிழகத்திலும் இலங்கை, மியன்மார் உள்ளிட்ட அயல் நாடுகளிலும், திருவள்ளுவர் திருநாள் மீண்டும் கொண்டாடப்பட ஆரம்பித்தது. வைகாசி அனுடமான 22 மே 1959இலும் இது இடம்பெற்றதை அறியமுடிகின்றது.

தையில் திருவள்ளுவர் திருநாள்

தைப்பொங்கலை நீண்ட நாளாகவே 'தமிழர் திருநாள்' என்று போற்றும் வழக்கம், தமிழர் மத்தியில் உண்டு. தமிழர் திருநாள் தைப்பொங்கல் என்பதால், அன்றே திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படவேண்டும் என்ற கருத்தை முதன்முதலில் சொன்னவர் தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம். இதை முன்மொழிந்து 1954இல், அவர் திருச்சி வானொலி நிலையத்துக்கும் கா.பொ.இரத்தினத்துக்கும் எழுதிய கடிதத்துக்கு, கா.பொ.இரத்தினம் கடும் கண்டனம் தெரிவித்தார்.வைகாசி அனுடம் ஆண்டுக்காண்டு மாறுபடலாம் என்பதால் 1966இல், சூன் இரண்டாம் தேதியை, ஆண்டு தோறும் திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடுவதற்கான அரச விடுமுறை அளிக்கப்பட்டது.எவ்வாறெனினும் இது 1971இல் தை முதலாம் தேதிக்கு மாற்றப்பட்டது.

[இனி மாதம்தோறும் பதினைந்தாம் நாள் குறள்விருந்து வெளிவரும்.]